KALANJIYAM (களஞ்சியம்) - International Journal of Tamil Studies
International Refereed Peer Reviewed Research Journal eISSN ***2456-5148*** *(Online)*
Journal Vol 4, Issue 02, May 2025 https://doi.org/10.63300/

Kaanak Kuravargal in Sangam Literature

Dr. P. Maheswari,
Assistant Professor, Department of Tamil (Aided),
Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. Bharathiar University

Received 25/04/2025
Accepted for publication 30/04/2025
Published 01/05/2025

Abstract

In mountainous regions, indigenous people, living as ancient tribal communities, have continuously inhabited their ancestral lands for generations without any displacement. These specific communities, identified by names such as Kaanavar, Punavar, Malai Kuravar, Malaivedan, and Malasar, resided in small settlements, groups, and hamlets within the hills and their adjoining areas. It is these very people who were referred to as Kaanak Kuravargal. The people of these hill communities collected food items such as honey, tubers, and fruits. They cultivated Thinai (millet) and Aivana Nel (a type of paddy) on the hill slopes. They hunted wild animals that came to graze on their crops, utilizing dogs, bows, and arrows. They lived in huts thatched with grass and made and wore clothes from aloe fiber. This research paper aims to explore these facets of their lives.

Keywords*: Mountains, Forest, Animals, Plants*

சங்க இலக்கியத்தில் கானக் குறவர்கள்

முனைவர். ப.மகேஸ்வரி,

உதவிப் பேராசிரியர், தமிழ்த்;துறை (அரசுஉதவி), நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம்;
கல்லூரி, பொள்ளாச்சி. பாரதியார் பல்கலைக்கழகம்:

சுருக்கம்

மலைப்பகுதிகளில் தொன்மையான பழங்குடிகளாக வாழும் பழங்குடியினர் தங்கள் பூர்வீகத்திலேயே காலங்காலமாகத் தொடர்ந்து இடப்பெயர்ச்சி ஏதுமில்லாமல் அங்கேயே வாழ்ந்து வருகின்றனர். இவர்களை கானவர், புனவர், மலை குறவர், மலைவேடன், மலசர் என்ற பெயர்களில் மலையும் மலை சார்ந்த பிரதேசங்களிலும், சிறுசிறு குடிகளாக, குழுக்களாக, சிற்றூர்களில் குறிப்பிட்ட மக்கள் வாழ்ந்தார்கள். இவர்களே கானக் குறவர்கள் என அழைக்கப்பட்டனர். மலை இன மக்கள் தேன், கிழங்கு, பழம் முதலிய உணவைச் சேகரித்தார்கள். மலைச் சாரல்களில் திணை, ஐவன நெல் விவசாயம் பார்த்தார்கள். பயிர்களை மேயவந்த காட்டுவிலங்குகளை நாய், வில், அம்பு கொண்டு வேட்டையாடினார்கள். புல்லால் வேயப்பட்ட குடிசைகளில் வாழ்ந்தார்கள். கற்றாழை நாரால் ஆடை செய்து உடுத்தினார்கள் என்ற நோக்கில் இவ்வாய்வுக் கட்டுரை அமைகிறது.

திறவுச் சொற்கள் : மலைகள், வனம், விலங்குகள், தாவரங்கள்

வேட்டையாடுதல்

கானக் குறவர்கள் வேட்டைத் தொழிலை முதன்மையான தொழிலாகக் கொண்டிருக்கவில்லை. அவர்களுடைய வெள்ளாமையை மேய வந்த காட்டுப் பன்றி, யானை, முள்ளம் பன்றி முதலான விலங்குகளை வேட்டையாடினார்கள். தினை, ஐவன நெல் விவசாயம் இவர்களுக்கு முக்கியத் தொழில். மீதிக் காலங்களில் உணவு சேகரித்தார்கள். உணவுக்காக வேட்டையாடினார்கள். வில், அம்பு இவர்களுடைய வேட்டைக்கருவிகள், அல்லது பாறைப் பிளவுகளில் தோல்வாரினால் பொறிவைத்துக் காட்டுப் பன்றிகளை பிடித்தார்கள்.

“தினை உன் கேழல் இரிய, புனவன்,

சிறுபெரிற மாட்டிய பெருங்கல் படாஅர்

ஓன் கேழ் வயப் புலி படூஉம் நாடன்

ஆர் தர வந்தனன் ஆயினும் படப்பை

இன் முகப்பெருங் கலை நன் மேயல் ஆரும்

பல் மலர்க் கான் மாற்று உம்பர்…….” (நற்றிணை *– 80.119)*

கொம்பும் வேட்டைநாயும் கொண்டு காடுகளில் மான்களை வேட்டையாடினார்கள்.

“கோடு துவையா, கோள் வாய் நாயொடு

காடு தேர்ந்து அசைஇ வய மான்வேட்டு

வயவர் மகளிர், என்றி ஆயின்

குறவர் மகளிரேம் குன்று கெழு கொடிச்சியேம்”

என்ற நற்றிணைப் பாடல் மூலம் அறியலாம். (நற்றிணை *– 276).*

சில சமயங்களில் ஆண் யானைகளை அவற்றின் தந்தங்களுக்காக வேட்டையாடினார்கள். குழிதோண்டி யானையை வீழ்த்திப் பிடித்தார்கள். வேட்டையில் குறி தவறினால் மலையில் உள்ள சாமிக்குச் சாந்திபலி கொடுத்தார்கள். “அமர்க் கண் ஆமான் அரு நிறம் முள்காது

பணைத்த பகழிப்போக்கு நினைத்து, கானவன்

அணங்கொடு நின்றது மலை, வான் கொள்க எனக்

கடவுள் ஓங்குவரை பேண்மார், வேட்டு எழுந்து” (நற்றிணை *– 165).*

என்ற பாடல் மூலம் வேட்டையாடினர் என்பதை அறிந்து கொள்ள முடிகிறது.

மேலும், இவர்கள் காலில் தோல் செருப்பணிந்து தோளில் கவட்டையை ‘கவை’ சுமந்து சென்றார்கள்.

“சிறு கரும் பிடவின் வெண் தலைக் குறும்புதல்

கண்ணியின் மலரும் தன் நறும் புறவில்,

தொடுதோற் கானவன் கவைபொறுத்தன்ன

இருதிரி மருப்பின் அண்ணல் இரலை” - (அகநானூறு *- 34,* பக்*.98)*

இவர்களுடைய கைகள் இரும்பைப் போலக் கருப்பாகவும் வலிமையாகவும் இருந்தன (அகநானூறு *- 172).*

"இரும்பு வடிவத் தன்ன கருங்கைக் கானவன்

விரிமலர் மரா அம் பொருத்தி, கோல்தெரிந்து

வரிநுதல் யானை அருநிறத்து வழுத்தி....."(பக். 515)

என்ற வரிகளின்; மூலம் கருமை நித்திலும் உடல் வலிமையானவர்களாக இருந்தனர் என்பதை அறிந்து கொள்ள முடிகின்றது.

கூடி வாழ்தல்

வேட்டையாடி வந்ததும் குறவர்கள் முற்றத்தில் கூட்டமாக அமர்ந்து பலாச் சுளையில் வடித்த கள்ளைக் குடித்து வேட்டையாடினார்கள். பொழுது சாய்கிற வேளைகளில் நீர்நிலைகளில் தண்ணீர் குடிக்கவரும் காட்டுப் பன்றிகளை எதிர்பார்த்தபடி குறவர்கள் ஒளிந்திருந்தார்கள். இரவில் மட்டுமின்றிப் பகலிலும் வேட்டை நாயொடு சென்று மலை, காடுகளில், புதர்களில் வலை வைத்து முயல்களைப் பிடித்தார்கள். மலை விவசாயம் இல்லாத காலங்களில் இவர்களுக்கு வேட்டையாடுவதே முக்கியத் தொழிலாகவும் இருந்தது.

பகிர்ந்து உண்ணுதல்

வேட்டையாடிக் கொண்டு வந்த காட்டுப்பன்றிகளைக் குறப்பெண் அறுத்துக் குறவர் குடிகளுக்கு முறைப்படி பங்கிட்டுக் கொடுத்தாள் (நற்றிணை. 336).

"பிணர்ச் சுவற்பன்றி தோல்முலைப் பிணவொடு

கணைக்கால் ஏனல் கைம்மிகக் கவர்தலின்,

கல் அதர் அரும்புழை அல்கி, கானவன்,

வில்லின் தந்த வெண் கோட்டு ஏற்றை,

புனை இருங் கதுப்பின் மனையோள் கெண்டி,

குடிமுறை பகுக்கும் நெடுமலை நாட" (நற்றிணை – 336)

வேட்டையாடி வந்த விலங்கின் இறைச்சியை வேட்டையாடியவன் வீட்டார் மட்டும் வைத்துக் கொள்ளும் வழக்கம் இல்லை.

உணவைச் சேமித்தல்

மிகுதியான இறைச்சியைக் குறவர் வீட்டுப் பெண்கள் பாறைகளில் காயவைத்துச் சேமித்து வைத்தார்கள். வேட்டை இறைச்சியைக் கொடிச்சி என்று கூறப்பட்ட குறமகள் சமைத்து, மோரோடும், அரிசி சாதத்தோடும் குறவனுக்குப் பரிமாறினாhள் (கூத். ஆற்). இதைத் தவிர, வரகு, திணை, கொள், அவரை, ஐவன நெல் அரிசி இவர்களுடைய முக்கிய உணவாகும். இதனை,

"அடலருந் துப்பின் ...

குரவே தளவே குருந்தே முல்லை என்று

இந்நான்கு அல்லது பூவும் இல்லை,

கருங்கால் வரகே, இருங்கதிர்த் திணையே,

சிறு கொடிக் கொள்ளே, பொறிகளர் அவரையொடு" (புற. 335)

என்னும் பாடல் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது.

கரண்டுபோன நிலத்தில் ஒரு வேடன், உடும்பு குத்தி, மண்ணைத் தோண்டி நுணல் பிடித்து, புற்றில் ஈசல்களைச் சேகரித்து, முயல் பிடித்து அத்தனையையும் அவன் தோளில் தொங்கிய பையில் முடித்து, வீட்டில் வந்து போட்டு விட்டுக் கள்ளைக் குடித்து மகிழ்ந்தானாம் *(நற்றிணை - 59).*

"உடும்பு கொலீஇ, வரி நுணல் அகழ்ந்து

நெடுங் கோட்டுப் புநறத்து ஈயல் கெண்டி,

எல்லு முயல் எறிந்த வேட்டுவன் சுவல

பல்வேறு பண்டத் தொடை மறந்து, இல்லத்து

இருமடைக் கள்ளின் இன்களி செருக்கும்

வன் புலக் காட்டு நாட்டதுவே! *(நற்றிணை – 59)*

என்ற பாடல் வரிகள் மூலம் கள் அருந்தியுள்ளனர் என்பதை அறிய முடிகிறது.

மலை விவசாயம்

மலைச் சாரல்களில் கானக் குறவர்கள் நெருப்பு மூட்டி மரங்களையும், புதர்களையும் சாம்பலாக்கி விளைநிலம் உண்டாக்கினார்கள்.

"சேரி விலைமாறு கூறலின், மனைய

விளிஅறி ஞமலி குரைப்ப, வெரீஇய

மதர்கயல் மலைப்பின் அன்னகண் எமக்கு,

இதை முயல் புனவன் புகைநிழல் கடுக்கும்

மாமூது அள்ளல் அழுத்திய சோகாட்டு" *(அகநானூறு - 140)*

என்ற பாடல் வரிகள் மூலம் பயிர்செய்தலை அறிந்து கொள்ள முடிகிறது.

இப்படி உண்டாக்கிய கொல்லைகளில் ஐவனம் என்ற மலை நெல்லை விதைத்து விவசாயம் செய்தார்கள்.

"கரிபுனம் மயக்கிய அகன்கண் கொல்லை

ஐவனம் வித்தி, மையுறக் கவினி

ஈனல் செல்லா ஏனற்கு இழும் எனக்

கருவி வானம் தலைஇ யாங்கு

ஈத்த நின்புகழ் ஏத்தித் தொக்களன்" *(புறநானூறு 159)*

என்ற பாடல் மூலம் மலை நெல்லை விதைத்து விவசாயம் செய்தார்கள் என்பதை அறிந்து கொள்ள முடிகிறது.

நீர்பாசனம்

அருவிநீரைக் கொண்டு ஐவனப் பாசனம் செய்தார்கள்.

"கைவளை நெகிழ்தலும் மெய்பசப் பூர்தலும்

மைட்டு சிலம்பின் ஐவனம் வித்தி

அருவியின் விளைக்கும் நாடனொரு" *(குறுந்தொகை – 371)*

இக் கொல்லைகளில் மழை பெய்தவுடன் உழுது திணை விதைத்தார்கள். திணை விவசாயத்திற்கு மழையை நம்பினார்கள். திணையோடு அவரையும் பயிரிட்டார்கள்.

"பெரும்புனக் குறவன் சிறுதிணை மறுகால்

கொழுங்கொடி அவரைப் பூக்கும்

அரும்பனி அச்சிரம் வாரா தோரே" (குறுந்தொகை – *82)*

"சிறு திணை கொய்த இருவி வெண் கால்

காய்ந்த அவரைப் படுகிளி கடியும்

யாணர் ஆகிய நல்மலை நாடன்" (ஐங்குநுறூறு – *286)*

மேலேயுள்ள இரண்டு பாடல்கள் மூலம் கானக் குறவர்கள் நீர்ப்பாசனம் செய்து பயிரிட்டு வாழ்ந்துள்ளதை நம்மால் அறிந்து கொள்ள முடிகிறது.

ஐவன நெல் பாசனத்தில், மலை மல்லி (நெல்), கற்றாழை முதலியவற்றைக் களை எடுத்தார்கள்.

"அருவிப் பரப்பின் ஐவனம் வித்திப்

பருவிலைக் குளவியொடு பசுமரல் கட்கும்

காந்தள் வேலிச் சிறுகுடி பசிப்பில்" (குறுந்தொகை *-138)*

மேலே குறிப்பிட்ட குறுந்தொகைப் பாடல் மூலம் நெல் பாசனத்தின் போது களையை அகற்றியுள்ளதை அறிந்து கொள்ள முடிகிறது.

சுற்றுப்புறம் காத்தல்

தங்கள் குடிசைகளை ஒட்டிப் பலாமரங்கள் வளர்த்தார்கள். பலாக்கனிகளை குரங்குகளிடமிருந்து காப்பாற்ற மரங்களில் வலை கட்டினார்கள்.

"கலைகை தெட்ட கமழ்சுளைப் பெரும்பழம்

காவல் மறந்த கானவன் ஞாங்கர்க்

கடியுடை மரந்தொறும் படுவலை மாட்டும்" (குறுந்தொகை *-342)*

பலாக்கனி கவர வந்த யானைகளை ஊரே திரண்டு விரட்டியது. திணை ஐவனக் கொல்லைகளை இரவும், பகலும் காட்டுப்பறவை விலங்குகளிடமிருந்து பாதுகாத்தார்கள். கொல்லைகளில் உயரமான பரண் கட்டி அதில் ஏறியிருந்து, பயிரை மேயவந்த பறவை விலங்குகளை விரட்டினார்கள். பகலில் குறப்பெண்களும், இரவில் குற ஆண்களும் காவல் காத்தார்கள். ஆண்கள் புலித்தோலைக் கட்டி பயமுறுத்தியும், பெண்கள் தட்டை என்ற கருவியை அடித்துக் கிளி, குருவிகளை விரட்டினார்கள். ஆண்கள், கிணை, கிணைப்பறை, கவன்கல், கீழ்க்கை, தீப்பந்தம் கொண்டு யானைகளை விரட்டினார்கள்.

காலத்தை மதிப்பிடல்

வேங்கை மரம் பூக்கின்ற காலத்தை திணை அறுவடைக் காலமாகக் கருதினார்கள். வேங்கை பூத்துவிட்டால் பின்னர் பணி தொடங்கிவிடும. விளைந்த திணைக்கதிரை அறுவடை

செய்ய உரிய நேரத்தை அறிய குறவர் குழுக்கள் இரவில் மின்மினி ஒளியால் வானத்தில் மேகத்தின் ஓட்டத்தை அவதானித்தார்கள்.

“பொரு இல் ஆயமோடு அருவி ஆடி,

நீர் அலைச் சிவந்தபேர் அமர் மழைக்கண்

குறியா நோக்கமொரு முறுவல் நல்கி,

பல்கிளைக் குறவர் அல்கு அயர் முன்றில்

குடக்காய் ஆசினிப் படப்பை நீடிய

பல்மர உயர் சினை மின்மினி விளக்கத்து” *(நற்றிணை – 44)*

என்ற பாடல்வரிகள் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது. மேலும், திணை அறுவடை செய்தபோது தொண்டகப்பறை அடித்தார்கள். பொதுவாக அன்று வேட்டை சாய்ந்தால் கொம்பு ஊதினார்கள். நெல் அறுவடை செய்தபோது பறை அடித்தார்கள். அரசர்கள் போரில் வென்றபோது பறை அடித்தார்கள். எயினர்கள் பசுக்களைக் கொள்ளையடித்துக் கொண்டு போனபோது பறை அடித்தார்கள். இந்த வழக்கம் மிகத் தொன்மையான வேட்டைச் சமுதாய வழக்கமாகலாம். திணை அறுவடையின்போது பறை அடித்தது,

“அம்ம வாழ தோழி இன்றவர்

வாரா ராயினோ நன்றே சாரல்

சிறுதிணை விளைந்த விமன்கண் இரும்புனத்து

இரவரி வாரினி தொண்க சிறுயறை” *(குறுந்தொகை - 375)*

திணை அறுவடையின் போது பறை அடித்து பறவைகளை விரட்டினர் என்பதை குறுந்தொகைப் பாடல் மூலமாக அறிந்து கொள்ள முடிகிறது.

வேங்கைப்பூச் சூடிய குறவர்கள் திணை அறுத்து வந்து அகன்ற பாறையில் இட்டுப் போரடித்தார்கள் என்பதை,

“வேங்கைக் கண்ணியர் எருது எறி களமர்

நிலம் கண்டன்ன அகன்கண் பாசறை

மென் திணை நெடும் போர் புரிமால்

துஞ்சு களிறு எடுப்பும் தம் பெருங்கல் நாட்டே” *(நற்றிணை – 125)*

நற்றிணை பாடல் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது.

உணவைச் சேமித்தல்

குறப்பெண்கள் திணையை வெயிலில் காயவைத்து, வீட்டில் சேமித்து வைத்தார்கள். திணை அறுவடைக்குப்பிறகு தாளமடியில் விதைத்து விளைந்து காயவிட்ட அவரையைக் குறப்பெண் கிளிகளிடமிருந்து பாதுகாத்தாள்.

“சிறு திணை கொய்த இருவி வெண் கால்

காய்ந்த அவரைப் படுகிளி கடியும்

யாணர் ஆகிய நல் மலை நாடன்” *(ஐங்குறுநூறு - 286)*

குறப்பெண்கள் அவரை விதைகளைக் காத்த நிகழ்வையும் இங்கு காணமுடிகிறது.

"கான் உறை வாழ்க்கைக் கதநாய் வேட்டுவன்

மான்தசை சொரிந்த வட்டியும், ஆய்மகள்"

இவ்வாறு 'காடு காத்து உறையும் கானவர்' களாகவும் (கூ.ஆ) வாழ்ந்த இம்மக்களிடம் கலப்படமற்ற பூர்வீகப் பண்பாடு நிறைந்த பாண்டிய நாடாக பொதிய மலை விளங்குவதை இப்பாடல் மூலம் அறிய முடிகிறது.

ஆரிய, வைதீக, வைதீகமல்லாத பண்பாடுகள் எவையும் எட்ட முடியாத தூரத்தில் மலைக் காடுகளில் இவர்கள் வாழ்ந்தார்கள். குற ஆண், பெண்கள் மாலை நேரங்களிலும், விழாக் காலங்களிலும் முற்றத்தில் கைக்கோர்த்துக் குரவை நடனம் ஆடினார்கள். சேர்ந்து பாடினார்கள்.

"குன்ற வேலிச் சிறுகுடி ஆங்கண்

மன்ற வேங்கை மணநாட் பூத்த

மணிஏர் அரும்பின் பொன்வி தாஅய்

வியல் அறை வரிக்கும் முன்றில், குறவர்

மனைமுதிர் மகளிரொடு குரவை தூங்கும்

ஆர்கலி விழவுக் களம்கடுப்ப, நாளும் *(அகநானூறு – 232)*

என்னும் அகநானூறு பாடலில் கோடையில் பழுத்த மாம்பழங்னிச் சாற்றில் பலாவின் சுளை கலந்து, தேன் கலந்து அக்கலவையை மூங்கில் குழாய்களில் அடைத்துக் கள்ளாக்கி, முதலில் கடவுள் இருக்கும் மலைக்குப் படைத்துவிட்டுப் பிறகு பெண்கள் ஊற்ற ஆண்கள் குடித்து மகிழ்ந்தனர்.

"என்ஆ வதுகொல் தானே – முன்றில்

தேன்தேர் சுவைய, திரள்அரை, மாஅத்து,

கோடைக்கு ஊழ்த்த கமல் நறுந் தீம்கனி

பயிர்ப்புறப் பலவின் எதிர்ச்சுளை அளைஇ,

இறாலொடு கலந்த, வண்டுமூசு, அரியல்

நெடுங்கண் ஆடு அமைப் பழுதி, கடுந்திறல்

பாப்புக் கடுப்பு அன்ன தோப்பி வான்கோட்டு" *(அகநானூறு – 348)*

"இன்சொல் அளாவல் விடமினிதூண் யாவர்க்கும்

வன்சொற் களைந்து வகுப்பானே மென்சொல்" *(ஏலாதி -7)*

என்று கூறுகிறது ஏலாதி. புதிதாக வரும் வழிப் போக்கர்களுக்குக் கள் கொடுத்து உபசரித்தார்கள்.

உயர்ந்த மலைகளில் இருந்த தேன் கூட்டில் தேன் எடுக்க நூல் ஏணி வைத்திருந்தார்கள். பழங்காலத்தில் மக்கள் புதிதாக வரும் வழிப்போக்கர்கள் அமர்ந்து இளைப்பாறி விருந்துண்டு செல்வதற்காக வீட்டிற்கு முன்பு திண்ணை அமைந்திருப்பதை இப்பாடல் வரிகள் மூலம அறிய முடிகிறது.

"நொத்தனை யாயின் கண்டது மொழிவல்

பெருந்தேன் கண்படு வரையின் முதமால்பு

அறியாது எறிய மடவேன் போல

ஏமாந் தன்றில் வுலகம்" (குறுந்தொகை – 273)

உயர்ந்த மலைப்பகுதிகளில் தேன் கூட்டிலிருந்து தேன் எடுக்க நூல் ஏணி வைத்திருந்ததை குறுந்தொகைப் பாடல் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது.

இக்குறவர்கள் கூட்டமாக மலையில் உறையும் தெய்வத்தை கும்பிட்டார்கள்.

"குன்றக் குறவன் கடவுள் பேணி

இரந்தனன் பெற்ற எல்வளைக்குறு மகள்

ஆய் அரிநெடுங் கண் கவிழ

சேயதால் தெய்ய – நீ பிரியும் நாடே" (ஐங்குநுறூறு – 257)

என்ற பாடல் ஐங்குநுறூறு பாடல் மூலம் காண முடிகிறது.

குறக்குலப் பெண்கள் வேங்கைமலர் தூவி, 'மலையுறை கடவுள் குலமுதல் வழுத்தித்தோம் - பலிச் செய்தார்கள்.

"பல் இருங் கூந்தல் மெல்லியலோள்வாயின்

பிரியாய் ஆயினும் நன்றே: விரிஇனர்க்

கால் எறுழ் ஒள்வீ தாய அய

முருகு அமர் மாமலை பிரிந்தெனப் பிரிமே" (ஐங்குநுறூறு – 308)

மேலே கூறப்பட்டுள்ள ஐங்குநுறூறு பாடல் மூலம் பெண்கள் இறைவனை வழிபட்டுள்ளனர் என அறியமுடிகிறது.

கானக் குறவர்கள் கும்பிட்ட மலைவாழ் தெய்வத்தைப் புலவர்கள் 'முருகு' என்றார்கள். இதுவே 'முருகன்', 'சேய்' என்று ஆண் கடவுளாகவும் அழைக்கப்பட்டது. இவன் மிகவும் கோபம் மிக்க கடவுளாகவும் அழைத்தனர். இந்த சாமியின் கோபம், மழை பெய்தால் சாந்தியடையும் என்று நம்பிய குறவர்கள் தம் சுற்றத்தோடு மலைமேல்சென்று பலிகொடுத்து நீர் வளாவி வழிபாடு செய்தார்கள்.

"அமர்க்கண் ஆமான் அருநிறம் முள்காது

பணைந்த பகழிப்போக்கு நினைந்து கானவன்

அணங்கொடு நின்றது மலை, வான்கொள்க எனக்

கடவுள்ஓங்கு வரை பேண்மார், வேட்டு எழுந்து" (நற்றிணை-165)

என்கிறது நற்றிணைப் பாடல். அவனுக்கு முகமன் கூறி, செந்திணையை நீரோடு கலந்து தூவிக் கும்பிட்டார்கள்.

'முருகு'; என உணர்ந்து, முகமன் கூறி,

உருவச் செந்தினை நீரொடு தூஉய்,

நெடுவேள் பரவும், அன்னை அன்னோ! (அகநானூறு – 272)

இந்த சாமியை மகிழ்விக்க குறவர்கள் குரவைக் கூத்தாடினார்கள் என்பதை பாடலின் வழி அறிய முடிகிறது.

"தெரியிழாய் நீயும் நின்கேளும் புணர

பரை உறை தெய்வம் உவப்ப, உவத்து

குரலை தழீஇ யாம் ஆட, குரவையுள்

கொண்டு நிலை பாடிக்காண்" (கலித்தொகை – 39)

மழைவேண்டி பலி தூவி இறைவனைக் கும்பிட்டார்கள் என்று கலித்தொகை விளக்குகிறது.

"மலைவான் கொள்க என உயர்பலி தூஉய்

மாரி ஆன்று மழைமேக்கு உயர்க எனக்

கடவுள் பேணிய குறவர் மாக்கள்

பெயல்கண் மாறிய உவகையர், சாரல்

புனத்தினை அயிலும் நாட! (புறநானூறு – 143)

என்ற பாடல் மூலம் மழைவேண்டி கடவுளை வழிபட்டனர் என்பதை அறியமுடிகிறது.

இந்த கோபக்கார ஆண் கடவுள் வயதுக்கு வந்த பெண்களைப் பிடித்துக் கொள்ளுவான் என்று நம்பினார்கள்.

"நெய்தல் நறுமலர் செருந்தியொடு விரைஇக்

கைபுனை நறுந்தார் கமழும் மார்பன்

அருந் திறற் கடவுள் அல்லன்

பெருந் துறைக் கண்டு, இவள் அணங்கியோனே" (ஐங்குறுநூறு -182)

இப்படி முருகன் பிடித்த (பேய்பிடித்த) பெண்ணைக் குணமாக்க, வேலவன் என்ற சாமியாடி (பூசாரி) பெண் வீட்டில் பந்தல் அமைத்து, மணலில் ஒரு களத்தை அமைத்துக் கொண்டான். முரகனை வழிபட்டு, கடம்பு மாலை சூடி, வாத்தியங்கள் முழங்க கைபெயர்த்துப்பாடி வேலன் சாமியாடினான்.

"வெறிகமழ் நெடு வேள் நல்குவலன் எனினே

செறிதொடி உற்ற செல்லலும் பிறிது எனக்

கான் கெழு நாடன் கேட்பின்" (அகநானூறு – 138)

முருகனை வீட்டிற்கு வரவைக்க அவனுடைய கடம்ப மரத்தையும் யானையையும் பாடி ஆடினான்.

"கடம்பும் களிறும் பாடி, நுடங்குடி

தோடும் தொடலையும் கைக்கொண்டு அல்கலும்

ஆடினர் ஆதல் நன்றோ? நீடு

நின்னொடு தெளித்த நல் மலை நாடன்" (அகநானூறு – 138)

அதோடு, ஆடறுத்து அதன் ரத்தத்தில் செந்திணையைக் கலந்து தூவி, பெண்ணைப்பிடித்த முரகனை மலையேற்றினான் வேலன்.

"வள நகர் சிலம்பப் பாடி, பலிகொடுத்து,

உருவச் செந்தினை குரதியொடு தூஉய்

முருகு ஆற்றுப்படுத்த உருகெழு நடுநாள்,

ஆரம் நாற, அரு விடர்த் ததைந்த

சாரற் பல் பூ வண்டு படச் சூடி"

பேய் பிடித்த பெண்ணைவிட்டுப் பேயை விரட்ட, ஓடைக்கு நடுவில் மறியாடு அறுத்து, திணையைப் பரப்பி, வாத்தியங்கள் முழங்க பெரும் தெய்வங்களை வாழ்த்திப் பாடிய செய்து வந்துள்ளது என்பதை,

"மறிக்குரல் அறுத்துத் தினைபிரப் பிரீஇச்

செல்லாற்றுக் கவலை பல்லியங் கறங்கத்

தோற்றம் அல்லது நோய்க்கு மருந்தாகா

வேற்றுப் பெருந்தெய்வம் பலவுடன் -வாழ்த்திப்" *(குறுந்தொகை-263)*

என்ற பாடலின் மூலம் குறுந்தொகை விளக்குகிறது. முருகு என்ற மலையுறை தெய்வத்தைத் தவிர குறவர்கள் வேறு தெய்வங்களையும் கும்பிட்டார்கள். 'கடி உண் கடவுள்' என்ற காவல் தெய்வத்திற்கு விளைந்து முற்றிய திணைக்கதிரைப் பலியாகப்; படைக்க, அதனைத் தெரியாமல் உண்ட ஒரு மயில் சாமியாரும் பெண்ணைப்போல வெறிபிடித்து நடுங்கியதாம்.

|புனவன் துடவைப் பொன்போல் சிறுதிணைக்

கடியுண் கடவுட்கு இட்ட சில்குரல்

அறியாது உண்ட மஞ்ஞை ஆடுமகள்

வெறியுறு வனப்பின் வெய்துற்று நடுங்கும்" *(குறுந்தொகை – 105)*

என்ற பாடல் மூலம் குநற்தொகை விளக்குகின்றது. தெய்வத்திற்கும் படைத்ததை உண்டால் தெய்வக்குற்றம் வரும் என்ற நம்பிக்கையின் வெளிப்பாடுதான். இது, ஊருக்குள் நுழையும் இடத்தில் இருக்கும் தண்ணீர்த் துறையில் வளர்ந்த பழைய மரத்தில் கடவுள் தங்கும் என நம்பினர்.

"எம் ஊர் வாயில் உண்துறைத் தடைஇய

கடவுள் முதமரத்து, உடன்உறை பழகிய

தேயா வளைவாய், தெண்கண், கூர் உகிர்" *(நற்றிணை-83)*

மேலே உள்ள பாடல்கள் மூலம் தெய்வபயம் கானக் குறவர்கள் மத்தியில் இருந்துள்ளதையும் தெய்வ வழிபாட்டின் மூலம் நிவர்த்தி செய்ததையும் அறிய முடிகிறது.

ஆலமரம், பனைமரம், வேப்பமரம், கடம்ப மரம் போன்ற மரங்களில் கடவுள்கள் தங்கும் என நம்பினர். மேலும் ஊருக்கு ஊர், மன்றம், பொதியில், அவை என்ற பெயர்களில் ஊர்ப்பொது இடம் இருந்தது. இங்கு நான்கு சுவர் எடுத்து, மேலே விட்டம் அமைத்து, கீழே ஒரு திண்ணை எழுப்பி, கருந்தூண் நிறுத்தி, அந்தத் தூணிலோ, சுவரிலோ கடவுள் உருவம் வரைந்து அதற்குப்பலி கொடுத்தார்கள். அந்த இடத்தில் பெரிய மரமும் இருப்பது வழக்கம். இதன்; தரையை மெழுகுச் சுத்தமாக வைத்தார்கள்.

"எழுது அணி கடவுள் போகலின், புல்லென்று

ஒழுகுபலி மறந்த மெழுகாப் புன்திணைப்" *(அகநானூறு – 167இ307)*

"புற்றுடைச் சுவர புதல்இவர் பொதியில்

கடவுள் போகிய கருந்தாட் கந்தத்து

உடன்உறை பழமையின்; துறத்தல் செல்லாது"

இதோடு "இல் உறை கடவுள்" என்ற குலதெய்வத்திற்கும் பலி கொடுத்தார்கள்.

"நல்இறை மெல்விரல் கூப்பி

இல்உறை கடவுட்கு ஆக்குவதும், பலியே" *(அகநானூறு – 282)*

மரங்களில் தெய்வம் தங்கும் என நம்பியுள்ளதை மேலே உள்ள அகப்பாடல் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது.

பெண் தெய்வம்

பெண் தெய்வங்களையும் கும்பிட்டார்கள். 'ஓங்கு புகழ்க் கான் அமர் செல்வி'

"நாம் செல் விழைந்தன மாக ஓங்கு புகழ்க்

கான்அமர் செல்வி அருளலின் வெண்கால்" *(அகநானூறு – 345)*

என்பதையும் காட்டில் இருந்த பெண் கடவுள் பற்றியும், கடல் செல்வி,

"கடல் கெழு செல்வி கரைநின் றாங்கு,

நீயே கானல் ஒழிய, யானே

வெறிகொள் பாவையின் பொலிந்தஎன்; அணிதுறந்து" *(அகநானூறு -370)*

என்று கடலில் இருந்த பெண் கடவுள் பற்றியும் குறிப்புகள் உள்ளன. 'சூரா மகளிர்' எனப்படும் அச்சம் தரும் தெய்வப் பெண்கள் காடு, மலை, சுணை போன்ற இடங்களில் தங்கி இருந்ததாகக் குறிப்புக்கள் உள்ளன.

"சூரா மகளிரின் நின்ற நீ மற்று

யாரையோ? எம் அணங்கியோய் உண்கு' *(அகநானூறு -32,198,288)*

:கவிரம் பெயரிய உருகெழு கவாஅன்,

ஓர்மலர் நிறைசுனை உறையும்

சூர்மகள் மாதோ என்னும் - என் நெஞ்கே" *(அகநானூறு -98)*

மேலும்,

"கனிமுதிர் அடுக்கத்துஎம் தனிமை காண்டலின்

எண்மை செய்தனை ஆகுவை – தண்ணிக்

கொடியோர் குறுகும் நெடி இருங் குன்றத்து

இட்டுஆறு இரங்கும் விட்டுஒளிர் அருவி" *(அகநானூறு -288)*

இந்தக் கடவுள்கள் அனைவருமே அச்சத்தை ஏற்படுத்துகின்றவர்களாகவும், தானியம், ஆட்டு ரத்தம் கலந்து பலி கொடுத்தால் சாந்தமடைகிறவர்களாகவும், மழை, விளைச்சல், சுற்றுப்புறத்தை அமைத்தல், வேட்டை, காலத்தைக்; கணித்தல், உணவைச் சேமித்தல், பெண்தெய்வ வழிபாடு ஆகியவற்றோடு சம்பந்தப்படுத்துகிறவர்களாகவும் காணப்படுகிறார்கள். காடு, மலை, சுணை, கடல், மரம் முதலான இயற்கைப் பொருட்கள் மற்றும் இடங்களோடு தொடர்புற்று உறைபவர்களாகவும் வாழ்ந்துள்ளனர் என்பதை இக்கட்டுரையின் வாயிலாகவும் நன்கு அறிந்து கொள்ள முடிகிறது.

துணை நின்ற நூல்கள்:

1. பாரதி, பி. (1990). *பண்பாட்டு மானிடவியல்*. மெய்யப்பன் பதிப்பகம்.
2. ஜெயபால், ஆர். (காலம் குறிப்பிடப்படவில்லை). *அகநானூறு (மூலமும் உரையும்)*. நியூ செஞ்சூரி புக் ஹவுஸ் (பி) லிட்.
3. ராஜாராம், டி. (காலம் குறிப்பிடப்படவில்லை). *குறுந்தொகை*. திருமகள் நிலையம்.
4. சுப்பிரமணியன், வி. டி. ஆர். (காலம் குறிப்பிடப்படவில்லை). *புறநானூறு*. திருமகள் நிலையம்.
5. தமிழ்ப்பிரியன், டி. (2016). *திரிகடுதம், ஏலாதி, இன்னிலை மூலமும் உரையும்*. நொவினோ ஆஃப்செட்.

References

1. Bharathi, B. (1990). *பண்பாட்டு மானிடவியல்* [Panpaattu Maanidaviyal: Cultural Anthropology]. Meyyappan Pathippagam.
2. Jeyapal, R. (n.d.). *அகநானூறு (மூலமும் உரையும்)* [Akananuru (Moolamum Uraiyum): Akananuru (Text and Commentary)]. New Century Book House (P) Ltd.
3. Rajaram, D. (n.d.). *குறுந்தொகை* [Kuruntokai]. Thirumagal Nilayam.
4. Subramanian, V. T. R. (n.d.). *புறநானூறு* [Purananuru]. Thirumagal Nilayam.
5. Tamilpriyan, T. (2016). *திரிகடுதம், ஏலாதி, இன்னிலை மூலமும் உரையும்* [Tirikatutam, Elathi, Innillai: Text and Commentary]. Novino Offset.

Copyright (c) 2025 Author

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.